# சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVAVIABI

12-03-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | துர்முகி வருடம் மாசி 28 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 111 பக்கம் - 12 | இதழ் 10 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச்


## உண்மையான நோன்பு பிறருக்கு உதவுவதாகும் - திருத்தந்தை



உண்மையான நோன்பு என்பது, பிறருக்கு உதவுவதாகும்; அதே நேரம், போலியான நோன்பு என்பது, மத உணர்வை, அழுக்கான செயல்களோடு கலப்பதாகும் மற்றும், இது தற்பெருமையை பறைசாற்றுவதாகும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வியாழன் காலை தன் மறையுரையில் கூறினார்.

இந்நாளைய திருப்பலி வாசகங்கள், உண்ணா நோன்பு பற்றி, அதாவது இத்தவக் காலத்தில் நம் ஆண்டவரிடம் நெருங்கிச் செல்வதற்கு அழைப்பு விடுக்கும் தவத்தைப் பற்றிப் பேசுகின்றன என்றுரைத்த திருத்தந்தை, தான் பாவி என்று உணர்ந்து, மனம் வருந்தும் உள்ளம் குறித்து இறைவன் மகிழ்கின்றார் என்ற திருப்பாடல் வசனத்தை குறிப்பிட்டார்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றியத் திருப்பலியில், போலியான மத உணர்வில் கடைப்பிடிக்கப்படும் நோன்பு பற்றி, முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா சொல்வதையும் விளக்கினார் திருத்தந்தை. வெளிவேட நோன்பு பற்றியும் விளக்கிய திருத்தந்தை, இயேசு வெளிவேடம் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார் என்றும், நோன்பிருந்துகொண்டு, அதேநேரம், வீட்டில் வேலைசெய்பவருக்கு உரிய கூலியைக் கொடுக்காமல் இருந்தால், அந்த நோன்பு, வெளிவேடம் என்றும் கூறினார்.

இரண்டாம் உலகப் போர்முடிவடைந்த சமயம் அது. இயேசு சபை அருள்பணியாளர் பேதுரோ அருப்பே அவர்கள், ஜப்பானில் மறைப்பணியாற்றியபோது, ஒரு பணக்கார தொழிலதிபர் அவரிடம் வந்து, நற்செய்திப் பணிகளுக்காக நன்கொடை வழங்கினார். அப்போது அவர் தன்னுடன், ஒரு புகைப்படக் காரரையும், ஒரு செய்தியாளரையும் உடன் அழைத்துச் சென்றிருந்தார். இவ்வளவுக்கும் அவர் கொடுத்த நன்கொடை பத்து டாலரே எனறும் கூறினார் திருத்தந்தை. கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப் பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும், பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு என, உண்மையான நோன்பு பற்றிச் சொல்லும் இறைவாக்கினர் எசாயா நூல் பகுதியையும் மறையுரையில் சுட்டிக்காட்டினார். இந்த வார்த்தைகளை நம் இதயத்தில் பதித்து, நாம் எவ்வாறு நோன்பு இருக்கிறோம் எனச் சிந்திப்போம் எனவும், 200 யூரோக்கள் பணத்திற்கு உணவு அருந்திச் செல்லும் மனிதர் ஒருவர், வீடு திரும்பும் வழியில், பசியால் வருந்தும் ஒருவரைக் கண்டும் காணாதது போல் நடந்து செல்வது எப்படி இருக்கும்? என்ற கேள்வியுடன் மறையுரையை நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ●

## நமது பங்குகளிலிருந்து: பெரிய நொளம்பை



புதுவை - கடலூர் உயர் மறை மாவட்டம், நொளம்பை மிஷனில் புதிதாக எழுப்பப்பட்ட புனித சகாய அன்னை ஆலயம் 5-2-2017 ஞாயிறு அன்று நமது உயர் மறை மாவட்ட பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் D.D.,D.C.L. அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டது. அவ்வமையம், இதுவரை மறைப் பணி மையமாக செயல்பட்ட இத்தலத்தை நமது பாசமிகு பேராயர் அவர்கள் புதிய பங்காக உயர்த்தி, இதுவரை மறைப்பணி இயக்குநராக பணியாற்றிய அருட்திரு. A. ராயப்பன் அவர்களை பங்குதந்தையாக நியமித்தார். இது நமது உயர் மறைமாவட்டத்தில் 103 ஆவது பங்கு ஆகும். புதிய பங்கின் இறை மக்களை யும், அதன் பங்குதந்தை அருட்திரு. A. ராயப்பன் அவர் களையும் வாழ்த்துகிறோம். நமது உயர் மறைமாவட்ட பேராயர் அவர்கள் தொடங்கிய முதல் மறைப்பணித் தலம் - நொளம்பை மிஷன் - இது பங்காவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் திறம்பட செய்த நமது பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் அவர்களை உளமார பாராட்டுகிறோம், நன்றி கூறுகிறோம். (உதவி: உயர் மறைமாவட்ட செய்தி மடல். மார்ச்,17)



தொகுப்பு: ஆசிரியர்.



## வாழ்த்துகிறோம்! பாராட்டுகிறோம்.

நமது புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டத்தைச் சார்ந்தவரும், பெங்களூர் தூய பேதுரு குருத்துவக் கல்லூரி விவிலிய பேராசிரியராகப் பணியாற்றுபவருமான பேரருட்தந்தை Dr.S. **ஸ்தனிஸ்லாஸ்** அவர்கள், கோயமுத்தூர் நல்லாயன் கல்லூரியின் அதிபர் தந்தையாக (RECTOR) நியமிக்கப்பட்டுள்ளார். நமது உயர் மறைமாவட்ட பேராயர், முன்னாள் பேராயர், குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள் பெயராலும் பேரருட்தந்தை அவர்களின் இப்புதிய பணியில் சிறந்தோங்க வேண்டுமென வாழ்த்துகிறோம்! பாராட்டுகிறோம்!! அவருக்காக இறையருள் வேண்டி செபிக்கின்றோம்.

- ஆசிரியர், சர்வவியாபி

ஆசிரியர் பேனா...

# தவக்காலம் - இறைவார்த்தை வெளிச்சத்தில் நாம் உயிர்த்தெழவே

விபூதிப்புதன் அன்று நம் நெற்றியில் சாம்பல் பூசப்பட்ட போது, நமது எண்ண அலைகள் பல விதமாக இருந்தது. கடந்த ஓராண்டளவாக எனது வாழ்க்கைப் பயணம் குறிப்பாக ஆன்மீக பயணம், நடந்த விதம் என்ன என்பதை நினைத் திருப்போம். "மனிதனே நீ மண்ணாய் இருக்கின்றாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்றோ, "மனம் திரும்புங்கள் நற்செய்தியை நம்புங்கள்" என்றோ அருட்பணியாளர் சொல்லித்தான் அந்த சாம்பலை நம் நெற்றியில் இடுகிறார். இரண்டுமே விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகள் தாம், ஒன்று, நமது இருப்பையும், இலக்கையும் சுட்டுகிறது, மற்றொன்று மனம் திரும்ப அழைப்பு விடுக்கின்றது.

நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தவக்காலம் மறு திரும்பிப் பார்த்தலுக்கு அழைப்பு விடுக்கும் காலம் என்றும், மன மாற்றம் பெறவும் அதனை அன்பிரக்கச் செயல்களில் வெளிப்படுத்த வேண்டும் என்றும் கூறுகிறார். நெற்றியில் பூசப்பட்ட சாம்பலுடன் நாம் ஆலயத்திலிருந்து வெளியேறி வெளியுலகிற்குச் சென்றபோது, இந்த பக்திமிகு ஆன்மீக அடையாளத்தை பார்த்தவர்களின் எண்ணங்கள் எப்படி இருந்திருக்கும்? என்ன நினைத்திருப்பார்கள்? அவர்கள் நம்மை உற்று நோக்கும்போது நமது உணர்வுகள் எவ்வாறு இருந்தன? - இவ்வாறு இந்த தவக்கால தொடக்கத் திலேயே சிந்திப்பது நல்லது. சிந்தித்து நமது வாழ்வை கிறிஸ்துவின் அறைகூவலுக்கும், திருச்சபையின் வழிகாட்டலுக்கும், நமது மனச்சான்றின் ஆய்வுக்கும் ஏற்ப சரி செய்து கொள்வது நமது அகவாழ்வில் மிகுந்த பலன் அளிக்கும். விபூதிப் புதன் அன்றும் அடுத்த நாளும் பல இதழ்கள் கிறிஸ்தவர்கள் தவக்காலத்தை தொடங்கி உள்ளதை செய்தியாக வெளி யிட்டன. தவக்காலம் நாற்பது நாட்கள் என்றும், முடிவில் இயேசுவின் உயிர்ப்பின் பெருவிழா கொண்டாடப்படும் என்றும் பல இதழ்களில் காணமுடிந்தது.

மக்கள் நம்மை கூர்ந்து நோக்குகிறார்கள்; ஊடகங்கள் உடனுக்குடன் செய்திகளைப் பரப்புகின்றன. இத்தகைய விளம்பரத்துக்காகவும் செய்திக்காகவும் அல்ல நமது தவக் காலம். சாம்பல் பூசுவதும், தவ உடை அணிவதும், திருச் சிலுவைப்பாதை செய்விப்பதும் தவமுயற்சியின் அடையாளம். இது இன்னும் செயலாக்கம் பெற வேண்டு மெனில் நம் செயல்களும் அணுகுமுறைகளும் வாழ்வும் மாற்றம் பெற வேண்டும். அப்பொழுது நம் தவ அடையாளங் களையும் தவமுயற்சிகளையும் பார்த்தவர்கள், கிறிஸ்தவர் களின் இந்த விசுவாச பக்தி முயற்சி அர்த்தமுள்ளது, குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தேவையானது, இவர்களில் கிறிஸ்து செயல் படுகிறார், வெளிப்படுகிறார் என்று நம்புவார் கள். இந்த விதத்தில் நமது தவக்காலம் ஒரு சான்றளிப்பு ஆகும்.

இந்த சான்றளிப்பு சமூகத்திலும் குடும்பத்திலும் நலமான விளைவுகளை உருவாக்கும். "மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன; அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பி னேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமை யாய் என்னிடம் திரும்பி வருவதில்லை" (எசா.55:10-11). விவிலியத்தில் நாம் காணும் கடவுளின் இவ்வார்த்தைகள் உண்மையானவை, நம்பிக்கையூட்டுபவை, இறைநம்பிக் கையை வளர்ப்பவை ஆகும். கடந்த ஞாயிறு (5-3-2017) மூவேளை செப உரையில், நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "கைப்பேசியை அடிக்கடி திறந்து செய்தியை வாசிப்பதுபோல, இத்தவக்காலத்தில் கையடக்க விவிலியப் பிரதியை நம்முடன் எப்போதும் வைத்துக் கொண்டு வாசிக்கப் பழகுவோம்; நம் உள்மனதில் மதிப்பீடுகளை வளர்த்துக் கொள்ளும்போது, தீமைகளை எதிர்த்துப் போரிடவும், அயலார் மீது அன்பு காட்டவும் அது உதவும்" என்றும் "கீழ்ப்படிதல் மற்றும் தாழ்ச்சிப் பாதையிலிருந்து இயேசுவை திசை திருப்ப முயலும் சாத்தானின் முயற்சியை முறியடிப்பது போல் நாமும் முறியடிக்க இவ்வார்த்தைகளே நமக்கு உதவும்" என்றும் கூறினார். பல புனிதர்களின் வாழ்வில் இதை செய்திருக்கின்றார்கள். நமது முன்னோர்கள், பெற்றோர், பெரியோர் நமக்கு சிறந்த முன்னுதாரணமாயிருக்கிறார்கள். இன்று நாம் இறைவார்த்தையின் துணையுடன், தூய ஆவியின் ஆற்றலுடன் இத்தவக்காலத்தில் சாத்தானை விரட்ட இயலும். பாவ நாட்டங்கள், பாவ சூழல்கள், தீவினை தரும் செயல்கள், உடலையும் ஆன்மாவையும் நற்பெயரை யும் சீரழிக்கும் தேவையில்லாத தீய பழக்க வழக்கங்கள் அனைத்தையும் முறியடிக்க இயலும்.

எனவே, இத்தவக்காலம் நமக்கு மிகுந்த பலனளிக்க வேண்டு மாயின் நம் வாழ்வை திரும்பிப் பார்த்து சிந்தித்து திருந்த வேண்டும். 2016-பிப்ரவரி 2-இல் அர்ப்பணிக்கப் பட்டோர் ஆண்டு நிறைவு திருப்பலியில் நமது பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் அவர்கள் மறுசீராய்வு (Review) செய்யவும், புதுப்பித்துக் கொள்ளவும் (Renew), மறு அர்ப்பணம் செய்யவும் (Rededicate) அனைவருக்கும் அழைப்பு கொடுத்தார். உயர் மறைமாவட்ட செய்தி மடலிலும் இதை வலியுறுத்தினார். இத்தவக்காலத்தில் இது நமக்கு மிகவும் பொருந்தும். ஆண்டுக் கொரு முறை வந்தபோதும் வெற்றுச் சடங்கல்ல தவக்காலம்; நாம் வாழ வேண்டிய அருளின் காலம், மனமாற்றத்தின் புதுப்பித்தலின் காலம். நம்மைச்சுற்றி இருப்பவர்களும் ஊடகங்களும் பலவாறாக கருத்துருவாக்கங்களை வெளியிடலாம். ஆனால் அகவாழ் வில் நாம் யார், நமது இலக்கு என்ன, நமது வாழ்வின் தரம் என்ன என்பதை இறைவார்த்தையின் வெளிச்சத்தில் சிந்தித்து செயல்படுவோம். புதியவாழ்வுக்கு கிறிஸ்துவுடன் நாம் உயிர்த்தெழ வேண்டும். ●

---

**✦ நெடுவாசல் போராட்டத்தில் 50 கிராமத்தினர் பங்கேற்பு:** நெடுவாசல் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு எதிராக 19-ஆவது நாளாக திங்கள்கிழமையும் (6-3-2017) தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தில், 50 க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகிலுள்ளது நெடுவாசல். பெண்கள், இளைஞர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் இதில் பங்கேற்கின்றனர். அரசியல், திரைத்துறையினர் ஆதரவளித்து வருகின்றனர். நடுவண் அரசு இத்திட்டத்தை ரத்து செய்யும் வரை இந்த அறப்போராட்டம் தொடரும் என போராட்டக் குழுவினர் தெரிவிக்கின்றனர். வெளியூரிலிருந்து வந்துள்ள இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற் கின்றனர். போராட்டக் களத்திலேயே உணவு தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படுகிறது. முப்பது ஆண்டு கால உழைப்பில் வளர்ந்த மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதை குறித்து வேதனை அடைகின்றனர். இத்திட்டத்தால், நிலம் நீர் இவற்றின் தன்மைகள் பல்வேறு மாறுதலடைந்து எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் நிலை வரும் என்று போராட்டக்காரர்கள் கருதுகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக மதுரை, திருச்சி, சென்னை, வேலூர், கோவை போன்ற பெருநகர்களிலும், தமிழகத்தின் பல கிராமங்களிலும் அடையாள போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. - (தினமணி, ஊடகங்கள் 7.3.17)

வாரச் சிந்தனை

தவக்காலம் 3-ஆம் ஞாயிறு (19-03-2017) வி.ப 17:3-7, உரோ 5:1-2,5-8, யோவான் 4:5-42

# தேடி வந்து மீட்பளிக்கும் இறைவன்

அருள்திரு. D. அலெக்சாண்டர்,
உதவி பங்குதந்தை, இறையூர்.

தவக்காலத்தின் மூன்றாவது ஞாயிறு நமக்கு ஒரு உன்னதமான, ஆழமான சிந்தனையை, தேடி வந்து நமக்கு மீட்பளிக்கும் தெய்வம் இயேசுதான் என்ற ஆழமான உண்மையை வெளிப்படுத்துகிறது. இயேசு சமாரியப் பெண்ணிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்கின்ற நிகழ்வு நமக்கு நற்செய்தி வாசகத்தில் தரப்பட்டுள்ளது. இயேசுவும் சமாரியப் பெண்ணும் பேசிக் கொள்வதை மிகவும் அருமையாக நாடகவடிவில் அருளப்பர் பதிவு செய்திருக்கிறார்.

**தாகம் தீர்க்கும் இறைவன்:** இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்களின் தாகத்தை கடவுள் தீர்க்கின்றார். இஸ்ரயேல் மக்கள் மோசேவிடம் முறையிடுகிறார்கள். எகிப்திலிருந்து வெளியேற்றி பாலைநிலத்தில் தங்களையும், தங்களின் பிள்ளைகளையும், கால்நடைகளையும் தாகத்தால் சாகடிக்கவா அழைத்து வந்தீர் என்று இஸ்ரயேல் மக்கள் கேட்கின்றார்கள். மீட்பளிக்கும் நல்லெண்ணத்தோடு அவர்களை அழைத்து வந்த இறைவனுக்கு அம்மக்களின் முணுமுணுப்பு கேட்கிறது. ஏனென்றால் அம்மக்களின் முறையீடு மோசேக்கு எதிரானது மட்டுமல்ல மாறாக கடவுளுக்கும் எதிரான முறையீடு ஆகும். தங்களுக்கு வந்த தாகத்தால் அவர்கள் செய்யக்கூடாத தவற்றை செய்தார்கள். அதாவது கடவுளை சோதித்தார்கள். ஏனென்றால் கடவுள் தங்களோடு இருக்கிறார் என்றால் இவ்வளவு கஷ்டம் வரக்கூடாது என்று அவர்கள் எண்ணினார்கள். எனவே கடவுளின் உடனிருப்பை சோதித்த அந்த மக்களுக்கு கடவுள் தமது உடனிருப்பை காண்பிக்கிறார். தான் அவர்களோடு பயணம் செய்வதை அவர்களின் தாகம் தீர்த்து நிரூபிக்கிறார். மக்கள் கடவுளை சோதித்த போதிலும் கடவுள் அவர்கள் மீது இரக்கத்துடன் செயல்பட்டு அவர்களின் தாகம் தீர்க்கிறார். நிபந்தனையில்லா கடவுளின் அன்பு வெளிப்படுவதை முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. ஒரேபு மலையில் மோசே பாறையை அடித்து மக்களின் தாகத்தை தீர்க்கிறார். கடவுளின் உடனிருப்பும் எல்லையில்லா அன்பும் அம்மக்களுக்கு உணர்த்தப்படுகிறது. மக்கள் கடவுளை விட்டு விலகிப்போனாலும் கடவுள் நம்மை வெறுப்பதில்லை மாறாக தேடி வந்து நம்மைக் காக்கிறார்.

**பாவிகளை மீட்டவர் இயேசு:** நாம் பாவிகளாக இருந்த போதே கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்தார். பாவிகளாக இருக்கின்றபோதும் கடவுள் நம்மீது காட்டுகின்ற அன்பு குறைவதில்லை. மேலும் இறைப்பற்று இல்லாத, வலுவற்ற விசுவாசம் கொண்ட மக்களுக்காககூட அப்போதே இயேசு தம் உயிரைக் கொடுத்தார். நல்லவருக்காக ஒருவர் உயிரை கொடுப்பதே அரிது. ஆனால் இயேசுவோ பாவிகளாக இருந்த போதும் நமக்காக தமது உயிரைக் கொடுத்து மீட்டார். எல்லையில்லா அவரது அன்பின் வெளிப்பாடுதான் இது. தேடி வந்து மீட்கும் தெய்வம் இயேசு என்பதை புனித சின்னப்பர் இரண்டாம் வாசகத்தில் ஆழமாக எடுத்துரைக்கிறார்.

பாவிகளாக, வலுவற்ற நம்பிக்கை கொண்டிருந்தபோதே இயேசு நம்மீது கொண்ட அன்பினால் நம்மை மீட்டார் எனில், நாம் இன்னும் ஆழமாக அவர் மீது நம்பிக்கை கொண்டு அவரது வழிகாட்டுதலில் நல்லவர்களாக வாழ்ந்தால் இன்னும் எவ்வளவு மாட்சியும் மகத்துவமும் நமக்கு அளிப்பார் என்பதை நம்மால் உணர முடிகிறது. நிச்சயமாக இயேசுவின் அன்பு நம்மை விட்டு விலகாது என்பதை நாம் ஆணித்தரமாக கூற முடியும். அப்படியென்றால் நாம் அவருக்கு கைமாறாக செய்ய வேண்டியது என்ன? எல்லையில்லாத, நிபந்தனையற்ற அவரது அன்பை அலட்சியம் செய்யாமல் அவருக்கு ஏற்புடையவர்களாக வாழ்வதுதான் நாம் செய்ய வேண்டியது ஆகும். அதைவிடுத்து நாம் பாவம் செய்தாலும் மீட்டுகொள்வார் என்று வேண்டுமென்றே பாவத்தில் வீழ்ந்து கிடந்தால் அவர் நம்மை நமது சொந்த விருப்பத்திற்கு விட்டுவிடுவார். ஏனென்றால் நம்மை கட்டாயப்படுத்தும் குணம் நம் ஆண்டவரிடம் இல்லை. எனவே நாம் பாவ நிலையிலிருந்து மனம் மாறி அவர் வழி வாழ வேண்டும் என்ற ஆழமான உண்மையை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

**தேடிச் சென்று மீட்பவர் இயேசு:** நற்செய்தி வாசகத்தில் இயேசு சமாரியப் பெண்ணிடம் குடிக்க தண்ணீர் கேட்கிறார். யூத மறையை மட்டும் பின்பற்றாமல் பிற தெய்வங்களையும் வழிபட்ட மக்கள்தான் இந்த சமாரியர்கள். இதனால் யூதர்கள் சமாரியர்களை வெறுத்தார்கள். ஆனால் இயேசுவோ யூதராக இருந்தபோதும் சமுதாய தடைகளை மீறி சமாரியப் பெண்ணிடம் பேசுகிறார். பேசுவதோடு மட்டுமல்லாமல் குடிப்பதற்கு தண்ணீரும் கேட்கிறார். தானாகவே முன்வந்து அந்த பெண்ணிடம் தன்னை வெளிப்படுத்துகிறார். அப்பெண்ணுக்கு நிலைவாழ்வளிக்கும் வற்றாத ஊற்றை வாக்களிக்கிறார். தேடிச் சென்று மீட்பளிக்கிறார்.

கிறிஸ்து எனப்படும் மெசியா இயேசுதான் என்ற வெளிப்பாடு இயேசுவின் வாயினின்றே அப்பெண்ணுக்கு அறிவிக்கப்படுகிறது. யூதர்கள் சமாரியர்களை வெறுத்தார்கள் ஆனால் இயேசுவோ, யூதராக இருந்தபோதும் சமாரியப் பெண்ணுக்கு மீட்பளிக்கிறார். அவரது அன்புக்கு தடையாக எதுவும் நிற்கமுடியாது. ஏனென்றால் அவர் கொண்டு வந்த மீட்பு எல்லாருக்கும் பொதுவானது, மக்களினம் முழுவதையும் அவர் மீட்டுக்கொண்டார்.

தவக்காலத்தின் இந்த ஞாயிறு வழிபாடு கடவுள் தம் மக்களை தேடி வந்து மீட்கிறார் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. நாம் கடவுளை விட்டு விலகினாலும் கடவுள் நம்மை விட்டு விலகுவதில்லை (இணை 31:6). எனவே நம்மை விட்டு விலகாத இறைவனை நாம் வலிந்து பற்றிக்கொண்டு அவர்தரும் மீட்பில் மகிழ்வோம்.

---

**✷ ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் கையேடு:** ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சிக்கு உதவும் மேய்ப்புப்பணி கையேடு ஒன்றை, புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை வெளியிட்டுள்ளது. இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நிறைவாக, 2016ம் ஆண்டு நவம்பரில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட திருத்தூது கடிதத்தில், ஒப்புரவு அருளடையாளம், கிறிஸ்தவ வாழ்வின் மையமாக அமைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இதற்கு உதவியாக, தவக்காலத்தில், ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்ற செப முயற்சி பற்றியும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் திருத்தந்தை. இந்தப் பக்தி முயற்சிக்கு உதவியாக, புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை, 63 பக்க மேய்ப்புப்பணி கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது. “நான் இரக்கத்தை விரும்புகிறேன் (மத்.9:13)” என்ற தலைப்பில், இம்மாதம் 24, 25 தேதிகளில் ஆண்டவரோடு 24 மணி நேரங்கள் என்றர செப முயற்சி கடைப்பிடிக்கப்படுகின்றது. மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தப் பக்தி முயற்சியை, மார்ச் 17, வெள்ளிக் கிழமை மாலை ஐந்து மணிக்கு, வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் தலைமையேற்று நடத்துவார்.-CWN



## நசரேத்தூர் மரியா 8

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**க**டவுளின் அற்புத படைப்பு ஒரு குழந்தையின் பிறப்பு. இம்மண்ணில் பிறக்கும் குழந்தை ஒவ்வொன்றும் அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் கடவுளின் பேரன்புக்குரியது. கடவுளுடைய திட்டத்தில் உருவானது. அதுவும் மரியாளின் பிறப்பு கடவுளின் தனிப் பெருந்திட்டத்தில் உருவானது. அந்தத் தனித்திட்டத்தைத் தவிர மரியாவுக்கு என்று தனித்தன்மை இல்லை.

மரியா பிறந்தபோது பாலஸ்தீனம் உரோமை ஆட்சியின் கீழ் இருந்தது. இஸ்ராயேல் ஆட்சியின் மகத்துவம் ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுகளாக அழிக்கப்பட்டிருந்தது. தாவீது, சாலமோனுக்குப் பிறகு கி.மு. 586–இல் இஸ்ராயேலின் ஆட்சி வீழ்ச்சியுற்றது. எருசலேம் அந்நியர் கைகளில் பிடிபட்டது. 538–இல் சீரியூஸ் மன்னன் காலத்தில் அதன் மதில் சுவர்கள், அதன் ஆலயத்துடன் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது. நசரேத்து வட மாகாணமான கலிலேயாவில் உள்ளது. அது செழிப்பான விவசாய நிலங்களைக் கொண்டது.

**மரியா எருசலேமின்:** எருசலேம் ஆலயம் திருநிலைப் படுத்தப்பட்டபின் மரியா பிறந்திருக்கிறார்கள். “என்னைப் பெண்ணாகப் படைக்காத இறைவன் வாழ்த்தப்பெறுவாராக!” (பாரூக் 7:18) என்ற மனநிலை நிலவிய சமுதாயத்தில் மரியா அன்னம்மாள்–சுவக்கின் தம்பதியருக்கு மகளாகப் பிறக்கிறார்கள். எபிரேய மொழியில் மிரியம் என்று பெயர் சூட்டப்பட்டார்கள். அரசாங்க பிறப்பு அட்டவணையில் அவர்களுடைய பெயர் எழுதப்பட்டிராது. காரணம் அக்காலச் சட்டப்படி ஆண் குழந்தைகள் மட்டுமே நாட்டின் குடி மக்களாகக் கருதப்பட்டார்கள். சமய ஆசாரங்களிலும் பெண்களுக்கு இடம் இல்லை. இருப்பினும் மோசேவின் சகோதரி மிரியம் ஒரு வீராங்கனையாகக் கருதப்பட்டாள். தெபோரா என்ற ஒரு பெண் மட்டும் நடுவர் வரிசையில் இடம் பெற்றிருக்கிறார்கள். பெண்கள் முக்கிய இடம் வகிக்கவில்லை. மேலும் அக்காலத்தில் கன்னிமை அவமதிக்கப்பட்டது. ஏனெனில் மலட்டுத்தன்மை ஒரு சாபமாகக் கருதப்பட்டது. அது கடவுளுடைய தண்டனையாகவும் எண்ணப்பட்டது.

சிறுமி மரியாவுக்கு முன்னோர் அட்டவணை இல்லை. லூக்கா மட்டும் பெண்களுக்குத் தனி இடத்தைத் தன் நற்செய்தியில் குறிப்பிடுகிறார். மிரியம் பக்தியுள்ள ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார்கள். மிரியம் தன் பாலப்பருவத்தையும் இளமைப்பருவத் தையும் அக்காலப் பெண்களுக்குரிய நிபந்தனைகளில் கழித்தார்கள் எனலாம். ஆனால் அவர்கள் தன்னைக் கடவுள் அன்பு செய்கிறார் என்ற உணர்வில் மிகுந்த எளிமையில் வாழ்ந்தார்கள்.

**மரியா என்னும் பெயர்:** இதன் அர்த்தம் என்ன? இதைப்பற்றி நீண்ட ஆய்வுகளும் விவாதங்களும் நடந்திருக்கின்றன. ஆனால் மரியா பாடிய “என் ஆன்மா” என்ற பாடலில் எல்லாத் தலைமுறை களும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே என்றார்கள். மண்ணுலகம் மரியாளின் மகத்துவத்தை அறியாதிருக்கலாம். ஆனால் விண்ணுலகம் மரியாவின் பெருமையை அறிந்திருந்தது.

**பாலப்பருவமும் இளமையும்:**



பதினைந்து வயது வரை அவர்களைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை. மரியா சாதாரண தாழ்ச்சியுள்ள பெண்ணாக இருந் திருக்கிறார்கள். அக்காலப் பெண் களைப்போல பெற்றோருக்கும் பின்னர் கணவருக்கும் பணிந்து வாழ்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். வீட்டு வேலை, சமையல், தையல் போன்ற வேலைகளைச் செய்திருக்க வேண்டும். ஆண்பிள்ளைகள் விவிலியப் பள்ளியில் ரபிகளிடம் இறை வார்த்தையை வாசிக்கக் கற்றுக்கொண்டார்கள். ஆனால் மரியாவுக்கு அந்த வாய்ப்பு இல்லை.

**செபக் கூடத்தில் மரியா:** மரியா மற்ற செபங்களைவிட திருப்பாடல்களைக் கேட்டுக் கேட்டு மனனம் செய்து தன் செப வாழ்வை வளர்த்துக்கொண்டுள்ளார்கள். சாபத் நாட்களில் மற்ற பெண்களுடன் செபக் கூடங்களுக்குச் சென்றிருப்பார்கள். மரியாவுக்கு இறைவார்த்தை மீது பசி இருந்தது. அவருடைய ஒளியால் ஊடுருவப்பட்டார்கள்.

**மரியாவின் விவிலியம்:** செபக் கூடத்தில் ரபி ஏட்டுச் சுருளை வாசிக்கும்போது அதில் இறைப் பிரசன்னத்தை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். அதனால் அந்த வாசகத்துக்கு மிகுந்த மரியாதை அளித்திருக்க வேண்டும். அவர்களுக்கு இறைவார்த்தை என்பது மௌனம் நிறைந்தது. தூய ஆவியால் நடத்தப்பட்டு சிறிது சிறிதாக தன் இளம் உள்ளத்தில் உள்ளார்ந்த ஒரு விவிலியத்தை உருவாக்கியிருக்க வேண்டும். மனதில் பதித்துத் தியானிப்பது அவர்களுடைய இயல்பாக இருந்துள்ளது என்பதை நற்செய்தயில் வாசிக்கிறோம்.

தொடரும்

---

**அன்னைக்குக் கரம் குவிப்போம்–4**



(முற்கால தற்காலச் செபங்கள்–
தமிழாக்கம் ச.லில்லி மரி) *12–03–2017*

**புனித அலக்சாண்டரியா சீரில்**

கடவுளின் தாயே மரியே! நான் உம்மை வாழ்த்துகிறேன். உலகனைத்தும் வணங்கும் செல்வமே! அணையாத ஒளியே! உம்மிடமிருந்தே நீதியின் ஆதவன் தோன்றினார். உண்மையின் செங்கோலும் தகர்க்க முடியாத ஆலயமும் தோன்றின. மரியே! நான் உம்மை வாழ்த்துகிறேன். எந்த இடமும் தாங்க முடியாதவரைத் தாங்கிய உறைவிடமே! நீர் முளைப்பித்த கதிர் என்றுமே வாடாது. உம் மூலமாக இடையர்கள் கடவுளுக்குப் புகழ் செலுத்தினார்கள். உம் மூலமாக நற்செய்தியில் ஆண்டவர் பெயரால் வருபவர் வாழ்த்தப் பெற்றார். உம் மூலமாக உலகெங்கும் சிலுவை ஆராதிக்கப்படுகிறது. வீழ்ச்சி அடைந்த மனுக்குலம் உம் மூலமாகவே எழுச்சியுற்றது. உம் மூலமாகவே வானகம் ஆர்ப்பரிக்கிறது. உம் மூலமாகவே அனைத்துலகும் உண்மையை அறிந்துகொண்டது. உம் மூலமாக மண்மீது திருச்சபை நிறுவப்பட்டது. ஓ இறைவனின் தாயே! உம் மூலமாக மண்ணுலகம் அக்களிக்கிறது.

---

✷**இந்தியா:** நம் நாட்டில் முதல் ‘ஹெலிகாப்டர்’ நிலையம் தில்லியில் “ஹெலிபோர்ட்” என்ற பெயரில் கடந்த செவ்வாய்க்கிழமை (28-2-2017) அன்று திறக்கப்பட்டது. பொதுத்துறை நிறுவனமான ‘பவான் ஹான்ஸ்’ நிறுவனத்தால், தில்லியில் ரோகினி பகுதியில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த ஹெலிகாப்டர் நிலையம் தினமும் 150 பயணிகளை கையாளும் வசதி கொண்டது. 16 ஹெலிகாப்டர்களை நிறுத்திவைக்கும் வகையிலான 4 மூடிய கட்டுமானங்களும், 9 ஹெலிகாப்டர்களை நிறுத்தி வைக்கக்கூடிய திறந்தவெளி நிறுத்துமிடங்களும் உள்ளன. தினமும் சராசரியாக 40 முதல் 50 ஹெலிகாப்டர் சேவைகள் இயக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. - தினமணி 1.3.2017



### இவ்வாரத்தின் இறைவார்த்தை

“இதோ மோசேயும் எலியாவும் அவர்கள் முன் தோன்றி உரையாடிக்கொண்டிருந்தனர்” (மத் 17:3)



# வழிபாட்டில் படைப்பு - மீட்பு - புனிதம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

மூவொரு கடவுளின் முழுமையான வாழ்வும் காலத்தைக் கடந்தும், காலத்திற்குள்ளும் படைப்பாக, மீட்பாக, புனித மாக வெளிப்படுவதை நாம் விசுவசித்து உணர்வது உகந்த தாகும். இறைவாழ்வு முழுவதும் ஒரு மாபெரும் வழிபாடாகவே இடம் பெறுவதை பரந்த விரிந்த மனப்பான்மையுடன் அறிந்து உணர்வோம். வழிபாட்டில் படைப்பு, மீட்பு, புனிதம் என்பதை நமது கண்ணோட்டத்திலும், இறைவனுடைய கண்ணோட்டத்திலும் நாம் அறிய இயலும். ஆழமான மறைபொருளான இறை வாழ்வை யும் இறைவழிபாட்டினையும் இன்னமும் கூடுதலாகப் புரிந்து கொள்ள செப உணர்வோடு தொடர்வோம்.

***படைப்பின் வழிபாடு:*** கடவுளைப் பொருத்தமட்டில், “படைப்பில் வழிபாடு” என்று நாம் சுவைக்க இயலும். நம்மைப் பொருத்தமட்டில், “வழிபாட்டில் படைப்பு” என்று உணர்வதும் உகந்ததாகும். கடவுளுடையது நித்திய நிரந்தர வழிபாடு ஆனால் நமதோ காலத்திற்கு உட்பட்டதாகும். கடவுளுடைய வழிபாட்டில் நாம் கண்டுணர்வது கடுகளவுதான் என்பது உண்மையாகும்.

“படைப்பின் வழிபாடு” என்பதை நமது திருநூலின் துவக்கத்தில் நாம் காண முடிகிறது, அது தொடர்கிறது. படைப்பு முழுவதற்கும் அடித்தளமிடுகிறார், படைப்பை அணிகலன்களால் அழகுபடுத்துகிறார். இத்தகைய எழில் மிகுந்த படைப்பில் வழிபாட்டினை மேற்கொள்ள தனது சாயலாக ஆணையும் பெண்ணையும் நிலைநிறுத்துகிறார். படைப்பு பீடமாகிறது, காணிக்கை விளைச்சலாகிறது, பங்கெடுப்போர் அவரது பிள்ளைகளாகின்றனர். அவரே வழிபாட்டினை வழிநடத்தும் வரலாற்று நாயகன் ஆகிறார். இதை சுவைப்பதற்கு நாம் கொடுத்து வைத்தவர்களாவோம்.

“வழிபாட்டில் படைப்பு” என்பதை கடவுளின் பிள்ளை களான நாம் அனுபவிக்க அழைக்கப்படுகிறோம். படைப்பு மனுவுக்காக, மனிதம் இறைவனுக்கு என்பதே முறையான, முழுமையான, முதன்மையான வழிபாடாகும். படைப்பில் நிலவும் ஒழுங்குமுறைகள் வழிபாட்டின் ஒழுங்குமுறைகளா கும். இறைவனுக்குரிய முதலிடம், மனிதனுக்குரிய இடம். படைப்பிற்குரிய இடம் என்ற விதிமுறைகள் வியப்பானவை என்று படைப்பு முழுவதையும் வழிபாடாக உணர்வோம்.

“அவனின்றி அணுவும் அசையாது” என்பது என்றும் நிலவும் உண்மை. படைப்பு என்றும் நிகழ்காலத்திற்கு உரியதாகும். நாம் அனைவரும் படைப்பும் ஒரு தொடர் படைப்பாகும், வழிபாடும் ஒரு தொடர் வழிபாடாகும். நாம் எல்லாரும் காலத்தினால் கட்டுப்பட்டு இருப்பதால், இயேசு ஆவியிலும், உண்மையிலும் வழிபட என்றும் அழைப்பதை உணர்வோம். படைப்பு, மனிதம் இவைகளின் இருப்பும் இயக்கமும் உண்மையிலும் அன்பிலும் இடம் பெறுவது உகந்ததாகும்.

***மீட்பின் வழிபாடு:*** பாவத்திற்குப்பின் படைப்பில் இடம் பெற்று வரும் மீட்பின் வழிபாட்டினை, பாவத்திற்குமுன், பாவத் திற்குப்பின், இயேசுவுக்கு முன், இயேசுவுக்குப்பின் என்று பொதுவாகப் புரிந்துகொள்ள இயலும். மூவொரு கடவுளின் இருப்பும் இயக்கமும் என்றும் இடம் பெற்று வருகிறது. மனித குலம் காலத்திற்கு உட்பட்டிருப்பதால் ஒவ்வொரு காலத் திலும் இடம் பெறுவதை மனித குலம் கணக்கில் எடுத்துக் கொண்டு வருகிறது.

படைப்பும், மீட்பும், புனிதமும் என்றும் தொடரும் மறை பொருளாகும். இவ்வாறு தொடர்வதில் ஜென்மப் பாவத்திற்குப் பின் மீட்பின் வழிபாட்டினை வாக்காக இன்பவனத்தில் வழங்கப்படுகிறது. அன்றிலிருந்தே மீட்பின் வழிபாடும் மனித குலத்தில் பதிய ஆரம்பித்துவிட்டது.இயேசுவுக்குமுன் மீட்பின் வழிபாடு “இறைவாக்கின்” பிரசன்னம், ஆற்றல் வழியாக மீட்பின் வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் இடம் பெற்று வந்தது. பல்வேறு வழிகளில், முறைகளில் மீட்பின் வழிபாடு வியப்போடு இடம் பெற்று வருகிறது.

மீட்பின் வழிபாடு இயேசுவில் இயேசுவைத் தொடர்ந்து இடம்பெறுவதையும், பெற்று வருவதையும் வரலாற்றிலும் வாழ்விலும், வழிபாட்டிலும் படைப்பிலும்இடம் பெறுவதை படைப்பும் மனித குலமும் அனுபவித்து வருவது உண்மை. இயேசுவில் மீட்பின் வழிபாடு வெளிப்படையாக இடம் பெறு வது ஒரு சிறப்பான அம்சமாகும். இயேசுவின் மீட்பு வழிபாட்டினை கிறிஸ்தவர்களுக்குள், திருச்சபைகளில் என்பதோடு, நல்ல மனது கொண்டவர்கட்கும் உள்ளது என்பதை மனித குலம் தடை செய்ய முடியாது, தீர்ப்பிடவும் இயலாது. படைப்பு முழுவதும் இயேசுவில் மீட்பை சுவைத்து வருவது கடவுளின் கருணையாகும். இத்தகைய நற்செய்தியை சுவைப்பவர்கள் ஏனையரோடு பகிர்ந்து கொள்வதும் கடவுளின் திருவுளமாகும்.

***புனிதத்தின் வழிபாடு:*** புனித ஆவியான கடவுள் படைப்பின் தொடக்கத்தில் இருந்து படைப்போடும், மனித குலத்தோடும் நிலைத்திருக்கிறார். எனவேதான் அருள்வாக்கு படைப்பு நல்லது. மனிதம் மிகவும் நல்லது என்று சான்று பகர்ந்து வருகிறது. படைப்பில் இடம் பெறுபவை, படைப்பில் இருப்பவை எல்லாம் புனிதமானது பல்வேறு பயன்பாடுகள் சான்று பகர் கின்றன. படைப்பில் இறைவனுடைய அருள் ஆற்றலை இந்திய மக்கள் நான்கு வேதங்களில் குறிப்பிடுகின்றனர். இவ்வாறே செயல்களிலும், இதயத்தின் ஆழத்திலும், அவதாரத்திலும் இறைவனின் புனிதத்தை உணர்ந்து, அறிக்கையிட்டு கொண்டாடி வருகின்றனர்.

பாவத்தினால் படைப்பின் புனிதம் பாதிக்கப்பட்டபோதும், படைப்புதான் பாதிக்கப்பட்டது ஆனால் படைப்பில் பதிந்திருக் கும் புனித ஆவி பாதிக்கப்படவில்லை. மாறாக புனிதம் பாதிக்கப்பட்ட படைப்பு, புனித ஆவியை அதிகமாய் கண்டுணர ஆரம்பித்தது. இயேசு நிகழ்வான பிறப்பு. இறப்பு, உயிர்ப்பு அனைத்தையும் படைப்புப் பெற்று, விடுதலை அடைந்து புனிதத்தின் மேன்மையை உணர முடிந்தது. ஆவியின் உணர்வுடமை படைப்பில் வாழும் மனித குலத் திற்குத் தேவை. இவ்வாறு புனிதத்தின் வழிபாடு எங்கும் இடம் பெற்றுவருவதை உணர்வோம். தவமுயற்சிகள், பரிகாரங்கள், பாவமன்னிப்பு, ஞானப்பயிற்சிகள் புனிதத்தின் வெளிப்பாடான அடையாளங்களாகும்.

***மூவொரு அனுபவம்:*** படைப்பும் மனிதரும் படைத்தவரின் பாதத்தில் பதியும் போது பயமில்லை. மாறாக இருப்பினும் கருணைமிகு கடவுள் படைப்பின் மீது பரிவன்பு கொண்டுள்ளார் என்பது நமது ஆழ்நிலை நம்பிக்கையாகும். படைப்பு, மீட்பு, புனிதம் என்பது மூன்றாக இருப்பினும் ஒன்றாகவும் மூன்றாகவும் ஒன்றை ஒன்று நிறைவு செய்து வருவதை நம்புவோம்.

படைப்பின் தனித்தன்மையும், பொதுத்தன்மையும் ஒன்று மூன்று, மூன்று ஒன்று என்ற மறைபொருளில் பின்னிப் பிணைக்கப் படுகிறது, என்று தனி நபரும் சமூகமும் சந்தோஷப்பட வேண்டும். இவண் போட்டி, பெருமை, உயர்வு தாழ்வு என்பதற்கு இடமில்லை. அவர்முன் அனைவரும் சமம் என்பதில் சாந்தியை சுவைப்போம்.

கடவுளின் இருப்பும் இயக்கமும் கடந்த காலத்தில் என்று நாம் அவரை கடந்த காலத்தில் இறைப்படுத்த இயலாது. அல்லது வருங்காலத்தில் வழங்குவார் என்று எதிர்கால கடவுளாக்கிவிட வேண்டாம். கடவுள் வாழ்வோரின் கடவுள், நிகழ் காலத்தில் நித்தியமும் இருக்கின்றார், இயங்குகின்றார், பாதுகாத்து, பரா மரித்து வருகின்றார் என்று கடவுளின் ஒவ்வொரு குழந்தையும் குழுவும் தினம் அனுபவிப்பது எவ்வளவோ ஆனந்தமாகும். மூவித வழிபாடும் ஒரே நேரத்தில் இடம் பெற்று வருகிறது, புதுப்பிக்கப் படுகிறோம், விடுவிக்கப் படுகின்றோம், புனிதமாக்கப்படுகின்றோம். இதை உணர் வதற்கு நமக்கு இதயம் உண்டு. எனவே தினம் தினம் காலை, நண்பகல், ஞாயிறு, மாதம் ஒருநாள், வருடம் ஒரு ஐந்து நாள் என நமது வாழ்வை வளமாக்கி நலமுடன் வாழ்வோம். கவலை, நோய், நொடிகள் இவைகளை எல்லாம் கடந்து களிப்புடன் வாழ்வாங்கு வாழ்வோம். வாழ்வோரின் இறைவனில் சாவுக்கு இடமில்லை, கண்ணீருக்கு இடமில்லை. ஆமென் அல்லேலூயா என்று வாழ்வின் மணத்தை முடிவில்லாமல் சுவாசிப்போம். ●



## நாம் அனுப்பும் செய்திகள்

–டாக்டர் அ. மதலைமுத்து, புதுவை–3.

**நடமாடும் ஊடகம்:** நாம் பழகும் பொழுதெல்லாம், செயல், வார்த்தை, கண் ஜாடை, செய்கை இவற்றின் மூலமாக அயலாருக்கு ஏதோ செய்திகளை அனுப்புகிறோம். அவர்கள் கவனிக்கிறார்கள், பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆகவே, நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதில் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**வார்த்தை விதைகள்:** நமது வார்த்தைகள் நேர்மறையானதாகவோ, எதிர்மறையானதாகவோ, ஆக்கப்பூர்வமானதாகவோ, ஊனப்படுத்துவ தாகவோ, அமையக்கூடும். வார்த்தை விதைகளை, யார் எவ்வாறு எதற்காக, எப்பொழுது விதைக்கிறார்கள் என்பதைப் பொருத்து அறுவடை தன்மை இருக்கும். சில சமயம், தவறாக புரிந்து கொள்வோரும் உண்டு, அதனாலும் காயங்கள் உண்டு. ஆனால், அதையறிந்த நொடியிலேயே நாம் அதற்காக வருத்தத்தை தெரிவிப்பது காயத்தைக் குணப்படுத்தும், உறவை மீட்டெடுக்கும். சில சமயம், மவுனங்கள் வார்த்தையை விட கூர்மையான வாளாகும். ஆகவே, "கெட்ட (தீமை விளைவிக்கும்) வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையும் படி, தேவைக்கு ஏற்றவாறு, அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல (ஊக்கம் தரும்) வார்த்தைகளையே பேசுங்கள்" (எபே.4:29).

**அடோல்ப் ஹிட்லர்:** நாம், நம் பெற்றோர், ஆசிரியர், பெரியோர் போன்று பலர் உரைத்த நல் வார்த்தைகளின் உருவாக்கமாக இன்று வாழுகிறோம். இதை மறந்துவிடக் கூடாது, மேலும் அவர்களை நன்றியோடு திரும்பி பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்பொழுது, நமது சுற்று. நாம் யாரை எவ்வாறு உருவாக்குகிறோம்? சிலர், தம் வசீகர வார்த்தைகளினால், உண்மையை மறைத்து பேசி நாட்டையும் வீட்டையும் சீரழித்தார்கள். சிலர், இப்பொழுதும் அதை செய்கிறார்கள். தொலைக்காட்சி பேச்சுகளையும், விவாதங்களையும் உற்றுக் கேளுங்கள். புரியும். அனைவரும் அப்படியல்ல. அடோல்ப் ஹிட்லர் தம் எழுச்சியூட்டும் பொய் வாதங்களால் உலக போரை துவங்கி, ஜெர்மனியை மட்டுமல்ல, ஐரோப்பா மற்றும் உலக நாடுகள் அழிய காரணமானார். அதே சமயம், வின்ஸ்டன் சர்சில் போன்ற உலக தலைவர்களின் ஊக்கப்படுத்தும் பேருரைகள், மக்களுக்கு, வீரர்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டின, மன போக்கை மாற்றின. உண்மை வென்றது!

**முழுமையான மனிதர்:** உணர்ச்சி தூண்டலில் உண்டாகும் இயல்பு நம் ஆன்மாவை பாதிக்கிறது. நம்மை நோக்கி வீசப்பட்ட வார்த்தை அம்புகளை நாம் எவ்வாறு நமக்குள் விவாதித்து புரிந்து கொள்கிறோம் என்பதைப் பொருத்து, அது நம் முழு ஆளுமைத் தன்மையை செதுக்குகிறது. நாம் முழுமையான மனிதனாக உருவாவதற்கு நமக்கு மூன்று அடிப்படையான உணர்வுகள், மற்றும் தன்மைகள் தேவைப்படுகின்றன. நாம் ஒன்றிற்கு, அல்லது ஒருவருக்கு சொந்தமானவர்களாக உணரவேண்டும். "காமராஜ் பள்ளி என் பள்ளிக்கூடம்" என்று உணராமல், அதற்கு நாம் பெருமை சேர்க்க முடியுமா? மேலும், நாம் தகுதி வாய்ந்தவர்கள், விலையேறப்பட்டவர்கள், எதையும் சாதிக்க சாமார்த்தியம் பெற்றவர்கள் என்ற உணர்வுகள் நமக்கு முக்கியமாகும். நாம், ஒரு குடும்பம், நிறுவனம், சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். மேலும், நாம் அன்பு பாராட்ட, மதிக்கப்பட, காப்பாற்ற, மற்றும் தலைவராக தகுதி வாய்ந்தவர்களாக உள்ளோம். ஆகவே, எந்த அவதூறு ஈட்டிகள் தாக்கினாலும், நாம் வெற்றிகொள்ள ஆற்றல் பெற்றவர்களாக இருக்கிறோம். நமது நல்ல உணர்வுகள், மற்றும் தன்மைகளில் வாழும் கடவுள் நமக்கு ஊட்டமளிக்கிறார்.

**கடவுளோடு நாம்:** "கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்... மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை; மாறாகக் கடவுளின் பிள்ளைக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள்." (உரோ. 8:14-16) ஆனால், நாம் சாதி, கட்சி,பதவி, குடும்பம் அல்லது நிறுவனத்தைச் சார்ந்தவர்களாக உணரும் அளவிற்கு, கடவுளைச் சார்ந்தவர்களாக உணர தவறுகிறோம். நாம் கடவுளின் பிள்ளைகள், கடவுளால் வாழுபவர்கள் என்று உணரும் வரைக்கும், நாம் முழுமையானவர்களாக உயரமுடியாது. நாம் எதை, அல்லது யாரை சார்ந்துள்ளோம் என்பதை பொருத்தே நம் தகுதி, மற்றும் வாழ்வு நிலை அமைகிறது. நாம் சுயநல தலைவர்களை சார்ந்திருக்கிறோமா? "ஊனியல் மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது சாவே (ஆளுமை அழிவே); ஆவிக்குரிய (இறை பிரசன்ன) மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது (நல்) வாழ்வும் (மன) அமைதியும் ஆகும்... ஊனியல் மனநிலை கடவுளுக்கு பகையானது.. கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது." (உரோ.8:6-8) கடவுள், நாம் அவருடைய அன்பை நம்ப வேண்டும், உணர வேண்டும் என்று விரும்புகிறார். நாம் யாரை நம்புகிறோமோ, அவரிடமிருந்து நமக்கு வல்லமை வருகிறது. மேலும் நம்மை சார்ந்தவருக்கு அதை பகிர உதவுகிறது. "நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும், நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவு"ளிடமிருந்து (எபே.3:20) தகுதியும் சக்தியும் பெறுகிறோம். "என்னை யாரும் நேசிக்கவில்லை. என்னால் சாதிக்க முடியவில்லை, விரக்தியாக உணருகிறேன்" என்கிற அனைவரும் கடவுளை நம்புகள், வேண்டுங்கள், கடவுள் உங்கள் வாழ்க்கைப் படகை செலுத்துவார்.

**வார்த்தையில் வனையும் குடும்பம்:** சில சமயம், நம் எண்ணப்படி, கணவன் மனைவி, பெற்றோர்-பிள்ளை, அண்ணன் -தம்பி கொண்ட உறவு தோட்டம் மகிழ்ச்சி பூக்களை கெடுப்பதில்லை. தீஞ்சொல் முள்குத்தி சிலர் இதயத்தில் வேதனைக் குருதி வழிகிறது. யார் உண்மையான காரணம் என உணர அழைக்கப்படுகிறோம். நாம் எத்தகைய சொற்களை பயன்படுத்துகிறோம் அல்லது பயன்படுத்தவில்லை? "பரவாயில்லை, விடு" என்று கூறி மன்னிப்பதை விட, அன்பு செய்தியை நாம் உரக்க கூறமுடியுமா? பழிபோடும் ஆசிரியர் ஒரு நல்ல மாணவனை அழித்துவிடக்கூடும். குற்றம் காணும் தந்தை மகனை பாழ்படுத்திவிடுவார். இத்தகையோரை பிள்ளைகள் பகைவர்களாக பார்ப்பார்கள், பிறகு சமுதாயத்தையே இவ்வாறுதான் காண்பார்கள். கவனம். "பொய்காரி" என்ற ஒரு வார்த்தை, மகளை தடம்புரள செய்துவிடும். அதைப்போல, மகனை திட்டுவதை விடுத்து, அவனோடு அமர்ந்து பாடம் சொல்லிக் கொடுங்கள். அவன் உங்களுக்கும் கடவுளுக்கும் நண்பனாவான் நண்பர்களே.●

---

### விண்ணக வாழ்வின்
### 23-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :29-03-1948



மறைவு: 16-03-1994

**திருமதி. ரத்திஸ்போன் மரி அர்லத்**

புதுவை உப்பளம் புனித சவேரியார் ஆலயத்தில் 16-3-2017 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அன்புள்ளங்கள் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**

**திரு. இரத்திஸ்போன் பிரான்சிஸ்**

**நினைவு கூறும்: இரத்திஸ்போன் ரஷேல்**

**பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரன்கள், பேத்திகள், குடும்பத்தினர்.**

**கோலாஸ் நகர், புதுவை.**

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி -163

மார்ச் மாத வெளியீடு. (2017)

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.



வாரம் தவறாமல் 111 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்துவரும் வாசகர் பெருமக்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துளும், பாராட்டுகளும் தவக்காலத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் நாட்களில் எப்படி ஜெபிக்க வேண்டும்? பலத்த சப்தத்தோடு, கண்ணீரோடு, ஸ்தோத்திர பலியுடன், உபவாசத்துடன், பரிசுத்த ஆவிக்குள், வெகுநேரம் ஊக்கத்துடன் விசுவாசத்துடன், விழித்திருந்து, தாழ்மையுடன் சோர்ந்து போகாமல், முழங்கால்படியிட்டு கண்களை வானகத்திற்கு ஏறெடுத்து, முகங்குப்புற விழுந்து, இயேசுவின் நாமத்தில், இடைவிடாமல் என்று திருவிவிலியத்தில் அறிகின்றோம். எனவே என் பாசத்திற்குரியவர்களே! இவைகளை நம் இதயத்தில் நினைத்தவாறு ஜெபித்து தவக்கால 40 நாட்களை நல்ல முறையில் பயன்படுத்தி என்றும் மகிழ்ச்சியாய் வாழ ஜெபத்துடன் வாழ்த்துகிறேன். தற்போது எம் சபையின் இறை அழைத்தல் இயக்குநராக செயல்பட்டு வருகிறேன். 100 ஆண்டுகளை கடந்த எம் சபைக்கு +2 படித்த, தொழில்கல்வி படித்த, ஏதாவது கல்லூரி படிப்பு படித்த இளைஞர்கள் உங்களுக்கு தெரிந்தவர்கள் இருந்தால் எனக்கு நீங்கள் வழிகாட்டலாம்.

இறை ஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு:** 1) பதில்களை **10–4–2017** க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறையில் முதல் **10** நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி ❖குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail: soosaimariarajendran@gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**

❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி** - 163
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்
தாராபுரம் – **638 656**, திருப்பூர் –Dt. செல்: **99423 11068**

## யோவேல் முதல் மீக்கா வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | 6 | | | 8 |
| | | 16 | | | | | 21 | | |
| | | | | 19 | | | | | |
| 2 | | | | | | | | 3 | |
| | | 17 | | | | 7 | | | |
| | 11 | | 4 | | | | | | |
| | 15 | | | | 13 | | 18 | 22 | |
| 10 | 12 | | | | | | | | |
| | | | | | | 20 | | | |
| 9 | | | | 14 | | | | | 5 |

**இடமிருந்து வலம்:**

1. ..............வழக்கைக் கேளுங்கள்.
2. ..............ப் பெரியோரையும் நாட்டில் குடியிருப்போரையும்
4. நான் சீயோனில் ..............
9. ................வாழும் பாசான் பசுக்களே
11. ................வாய்க்குப் பூட்டுப் போடு.
12. நீர் செவி..............
15. ஓலமிட்டுக் ..............அழுவேன்.
16. உங்களுக்கு எதிராக.............யிடப் பட்டுள்ளது.
17. வீரன் எதிர்த்து நிற்க................
19. இஸ்ரயேல் மக்களை..............விடும்.

**வலமிருந்து இடம்:**

1. .............அவர்கள் கரை போய்ச் சேர
5. ............. குழம்புகளை வெண்கலம் ஆக்குவேன்.
13. தம் மனத்தை.................க் கொள்வார்.
14. நாடு முழுவதும் .........நதியின் வெள்ளமென
20. கோவில்............ மலை

**மேலிருந்து கீழ்:**

1. ..................மிகு வெட்டுக் கிளிகளின் பெருங்கூட்டம்
2. அடுத்த..............வறட்சியை உண்டாக்கினேன்.
4. இதைக் .............மனம் மாறினார்.
6. கர்ப்பவதிகள் .............ப் பீறிக்கிழித்தார்கள்.
7. யூதாவின் மேல்..............க் கொட்டுவேன்.
8. தீச்செயல் அனைத்திற்காகவும் நான் உங்களைத்....................
10. மப்பும் மந்தாரமும் சூழ்ந்த..................
18. முடமாக்கப்பட்டோரை...................சேர்ப்பேன்.
21. அவற்றைக்.............. பேச வேண்டாம்.
22. ..................பாவத்திற்கு ஊற்று நீங்களே.

**கீழிருந்து மேல்:**

2. ...............செய்யும் குருக்கள்.
3. ...............மலையைத் தமதாக்கிக் கொள்வார்கள்.
5. தமஸ்குவின் தாழ்பாளை................
10. குற்றங்களுக்காகத் தண்டிக்கும்.............
11. செடி................போயிற்று.
17. வேனிற்கால...........களை இடித்துத் தள்ளுவேன்.



**திரு.R.ஆரோக்கியசாமி**

**தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் (ஓய்வு), புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி, திண்டிவனம்.**

**பிறப்பு: 26-02-1926**
**இறப்பு: 13-03-2011**

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள் பவன் இறப்பினும் வாழ்வான்"*
*- யோவான். 11:25*

## விண்ணக வாழ்வின் 6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தந்தையே! தாங்கள் ஆலாயிருக்க நாங்கள் ஆளானோம்**
**வேராயிருக்க நாங்கள் வளர்ந்தோம்**
**தேராயிருக்க நாங்கள் வலம் வந்தோம்**
**ஊராயிருக்க நாங்கள் உலகறிந்தோம்**
**விழுதாகி இன்று நாங்கள் ஆலாகி தங்களின் உலகாயுள்ளோம்.**

***நல்லாசிரியரே! நீர் இறையடி சேர்ந்தாலும் உம் திருவடி என்றும் எம்மில் நிற்கும் நீரிலும் கண்களுடன் நிதம் உம்மை நினைத்திருப்போம், நிகரேதும் இல்லாத நிழல் மரமே உமை மறவோம்.***

13-3-2016 திங்கள் மாலை 6.00 மணிக்கு, திண்டிவனம் புனித வியாகுல அன்னை ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு வீராரெட்டிகுப்பம், புனித சகாய மாதா ஆலயத்திலும் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு எங்களது தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கவும்.

**பிரிவால் துயருறும்**
மனைவி: **ரத்தினமேரி ஆரோக்கியசாமி**
மகன்: அருட்திரு. **A. பெர்மான்ஸ் பீட்டர்**
**மற்றும் பிள்ளைகள், உறவினர்கள்.**
திண்டிவனம்.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 15ஆம் படலம்

யாவே கடவுளின் வலிய கரம் எகிப்தின் மீது நீண்டது! அங்கு நிகழ்ந்த பத்து வாதைகளும் வியத்தகு நிகழ்ச்சிகளும் இறைவனின் அருஞ்செயல்புரியும் ஆற்றல் மோசே இறைவாக்குரைக்கும் அலுவலின் அடையாளங்களாக உள்ளன. இவ்வாதைகள் அனைத்தும் இறைத் தீர்ப்பாக யாவே கடவுள் அனுப்பியவை என்று திருவிவிலியம் தெளிவாகக் கூறுகின்றது.

60 **(விப.8:12) "மோசேயும் ஆரோனும் பார்வோனை விட்டகன்றனர். பின்பு பாரவோன்மேல் ஆண்டவர் வரவிட்டிருந்த தவளைகளைக் குறித்து மோசே ஆண்டவரை நோக்கி மன்றாடினார்."**

இப்படியாய் இரண்டுவதை கண்டதிர்ந்த பார்வோன்
எப்படியும் தவளைவதை தீருமென நம்பி,
ஒப்பியவன் மோசேயைக் கேட்டிட்ட படியே,
உடன்வேண்டல் செய்தற்கே அரசன்விட் டகன்றார்!
எப்பொழுதும் தம்முடனே இருக்கின்ற யாவே
இடம்மோசே, 'தவளைவதை அனுபவிப்போன் ஏற்கச்
செப்பியவர் உறுதியுடன் வந்தபடி நிகழச்
செயவேண்டும்' என்றிறையை மன்றாடி நின்றார்!

(பார்வோனிடம் கூறிவந்தவாறு அனைத்தும் நிகழுமாறு மோசே யாவே கடவுளிடம் மன்றாடினார்.)

61 **(விப.8:13)"ஆண்டவரும், மோசேயின் மன்றாட்டின் படியே செய்தருளினார். ஆக, வீடுகள், முற்றங்கள், வயல்கள் ஆகியவற்றில் தவளைகள் மடிந்து போயின."**

மன்றாட்டை அப்படியே கேட்டிட்ட யாவே
மன்னனிடம் மோசேதான் சொன்னபடியே நிகழ,
ஒன்றிட்டார் மோசேயின் உணர்வுகளை ஏற்றே
உறுத்துகின்ற தவளைவதை தீர்ந்தொழியு மாறே!
நன்றேதான் அதன்படியே வீட்டிடங்கள் எங்கும்,
நல்லழகு முற்றங்கொள் விரிவிடங்கள் எங்கும்,
குன்றாமல் விளைகின்ற வயல்பரப்பு எங்கும்
குவிந்தலைந்த தவளையெலாம் மடிந்தனவே ஒன்றாய்!

(ஒன்றிட்டார்-மோசே முன்பே வேந்தனிடம் உறுதியாகச் சொன்னவாறு அனைத்தும் நிறைவேற மோசேயின் எண்ணங்களை அப்படியே ஏற்றுக்கொண்டார்; (குவிந்தலைந்த - கூட்டமாய் ஒன்றாகச் சேர்ந்து அலைந்து திரிந்த)

62 **நாளைக்குத் தவளைகள் அகன்றோட மோசேயையும் ஆரோனையும் ஆண்டவரிடம் மன்றாடச் சொன்ன பார்வோன், அடுத்தநாள் விடிந்தபோது அவன் கண்ட காட்சியோ அவனைப் பதறவைத்தது!**

விடிந்திட்ட அடுத்தந்த நாளதிலே பார்வோன்
வீழ்ந்தனைத்துத் தவளைகளும் மடிந்திருக்கப் பார்த்தான்!
இடிதாக்கும் வேதனையால் துடித்தழன்றான் அவனே!
இப்படியோர் அருஞ்செயலே நடந்ததுவும் மோசே,
'மடிந்திங்கே தவளையெலாம் ஒழியுமெனச்' சொன்ன
மந்திரச்சொல் அதனால்தான் என்றவனே கண்டான்!
துடிப்பின்றித் தவளைமடிந் திருப்பதையே நோக்கிச்
சோர்ந்தொடுங்க அவனுணர்வும் துவண்டொடுங்கி அமர்ந்தான்!

(அருஞ்செயல்-இதற்குமுன்,நடைபெறாத ஓர் அரியசெயல்; மந்திரச் சொல்-எகிப்திய மந்திரவாதிகள் பயன்படுத்தும் மாய மந்திரச் சொல் போன்றதொரு மிகுந்த ஆற்றல் படைத்த சொல்)

63 **தவளைகளெல்லாம் காலையில் கத்தாமல் செத்துக் கிடக்கின்றனவே என்றும் தன் அரண்மனையில் பாதுகாப்பு இருக்குமென்று வந்து தங்கிய அவற்றிற்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டதே என்றும் பார்வோன் தன் தெய்வங்களிடம் முறையிட்டான்!**

கத்துகின்ற தவளையொலி கேட்கவிலை என்ற
கவலையினால் மாமன்னன் நிலைகுழம்ப லானான்!
நித்தமந்த தவளைகளோ நீர்நிலைகள் எங்கும்
நீந்தியவை வாழ்ந்திருந்த நிலைகெட்டே இன்று
செத்தனவே எனக்கவன்றான்! திடுக்குற்றான் அந்தோ!
சேர்ந்தனைத்தும் தன்மனையில் வாழ்ந்திருக்க வந்தும்
தத்தியிங்குத் தவழ்ந்தோடி நத்தியெனை நாடி
தங்கியுயிர் காக்கமுடி யாததனால் கொத்தாய்
இத்தரையில் துடிப்பொடுங்கிக் கிடப்பதென்ன காட்சி!
ஏன்இந்தக் காட்சியெனத் தன்தெய்வம் நொந்தான்!

(இத்தனை தவளைகளும் என் அரண்மனைக்குள்வந்து இப்படிச் செத்துக் கிடப்பதன் அறிகுறிதான் என்னவாக இருக்கப் போகிறதோ என்பதுவே பார்வோனின் பெருங் கவலையாயிற்று!

43 **இளம் உள்ளங்களுக்கு**

# நட்பு

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை.



நட்பு மனிதர்களுக்கு கிடைத்த மிக உயர்ந்த பரிசு. அது எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாத ஒருவித அரவணைப்பு. உயர் நட்பில் தியாகம் என்பது இயல்பான ஒன்றே.

Beck - Nicholes: "யார் இதை செய்தது? இந்த கண்ணாடியை உடைத்தது யார்?" என்று கோபத்தில் கொந்தளித்தார் வகுப்பாசிரியர். வகுப்பில் எந்த ஒரு சலனமும் இல்லை. மீண்டும் இடியென உறுமினார் வகுப்பாசிரியர்: "யார் அந்த குற்றவாளி? யாரும் சொல்லவில்லையென்றால்...." அவர் சொல்லி முடிக்கவில்லை. பெக் (Beck) என்ற அந்த சிறுவன் எழுந்து நின்றான். அந்த தவறை செய்தது தான் என்று ஏற்றுக்கொண்டான். கோபத்தின் உச்சியில் இருந்த அந்த ஆசிரியர் சிறிதும் இரக்கம் இல்லாமல் அந்த சிறுவனை பிரம்பினால் பின்னி விட்டார். அந்த வகுப்பு முழுவதும் அதிர்ச்சியடைந்தது. உண்மையான குற்றவாளியான நிக்கோலாசும் கூட அதிர்ச்சியடைந்தான். ஏனெனில் அவன் பெக்கின் மிக நெருங்கிய நண்பன்.

வகுப்பு முடிந்தது. பெக்கின் தோளில் சாய்ந்து விசித்து அழுதான் நிக்கோலாஸ். இனி தவறு செய்ய மாட்டேன். நல்லவனாக நடந்து கொள்வேன் என்று வாக்களித்தான். தனக்காக பெக் தண்டனை பெற்றதை அவனால் மறக்க முடியாது.

**அதிசய சூழ்நிலை:** காலச் சக்கரம் சுழன்றது. வாக்களித்த படியே நிக்கோலாஸ் நியாயத்தை நிலைநாட்டும் நீதிபதி யானான். இங்கிலாந்தின் பிரபலமான பிரபுவான ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) லின் நம்பிக்கைக்குரிய நெருக்கமான நண்பனானான். பெக் இங்கிலாந்தை ஆண்ட முதலாம் சார்லஸ் (Charles) மன்னனின் மிகுதியான செல்வாக்கை பெற்றவனானான். இந்த சூழலில் மன்னன் மக்கள் பிரதிநித்துவ மன்றத்தை மதிக்காமல் எதேச்சதிகாரத்துடன் செயல்பட்ட தால் உள்நாட்டுபோர் ஏற்பட்டு மன்னன் கைது செய்யப்பட்டு மரணத் தண்டனையும் நிறைவேற்றப்பட்டது. மன்னனின் நெருங்கிய சகாவான பெக் கைது செய்யப்பட்டு நீதிபதியின் முன் நிறுத்தப்பட்டான்.

**நீதியும் இரக்கமும்:** அங்கே நீதி அரசராக வீற்றிருந்தது வேறு யாரும் அல்ல. பெக்கின் அன்றைய வகுப்பு நண்பன் நிக்கோலாஸ்தான். வித்தியாசமான சூழ்நிலை! இப்போது கிராம்வெல் அதிபரால் நியமிக்கப்பட்ட நீதிபதி என்ற முறையில் மன்னனின் ஆதரவாளன் என்ற காரணத்திற்காக பெக்கிற்கு மரணத்தண்டனை விதித்தான் நிக்கோலாஸ். தீர்ப்பை எழுதி அடுத்த கணமே தானே குதிரைமீது ஏறி விரைந்து சென்று தொலைவில் உள்ள லண்டனை அடைந்தான். தற்போதைய இங்கிலாந்தின் ஆட்சி பொறுப்பில் இருந்த கிராம்வெல்லிடம் தன் நண்பனுக்காக பரிந்து பேசி மரணத் தண்டனையை ரத்து செய்து விடுதலையை பெற்றுத் தந்தான்! விடுதலை உத்தரவுடன் திரும்பி வந்த நிக்கோலாஸ் தன் நண்பன் பெக்கை கட்டித்தழுவிக் கொண்டான். அன்பு வெற்றி பெற்றது. நீதி தன் கடமையை செய்தது. இரக்கம் வாழ வைத்தது.

**அன்பு - நீதி - இரக்கம்:** கடவுளின் அன்பு மனிதனை அவர் சாயலாகப் படைக்க செய்தது. மனிதன் கீழ்ப்படியாமையால் பாவம் செய்தான். கடவுளின் நீதி அவனை தள்ளி வைத்தது. தண்டனை கொடுத்தது. அதே கடவுளின் இரக்கம் அவனை தண்டனையிலிருந்து மீட்டு மீண்டும் கடவுளின் அன்பில் இணைத்துவிட்டது.

**டுவிட்டர்:** "தவக்காலம், நம் உடனடி மனமாற்றத்திற்கு அழைப்பு விடுக்கின்றது. நம் முழு இதயத்தோடு இறைவனிடம் திரும்பி வருவதற்கு நாம் அழைக்கப்படுகின்றோம்" - திருத்தந்தை டுவிட்டரில்.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு.A. **வின்சென்ட் பீட்டர்,**

(வின்சென்ட் டிராவல்ஸ் உரிமையாளர்)

**பிறப்பு : 03-04-1946**
**இறப்பு : 16-03-2016**

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்- (யோவான்.11:25)

31-3-2017 வெள்ளி பகல் 12 மணிக்கு தூய இருதய ஆண்டவர் பசிலிக்காவில் சிறப்பு திருப்பலியும், காலை 6.15 மணிக்கு புனித ஜான் மரிய வியான்னி ஆலயத்திலும், (ரெயின்போ நகர்) காலை 6.15 மணிக்கு புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும், காலை 6.30 மணிக்கு புனித கார்மேல் அன்னை ஆலயத் திலும் (கோவிலானூர்), காலை 7.00 மணிக்கு கோனான்குப்பம் புனித பெரியநாயகி அன்னை ஆலயத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மனைவி:A.ஜோஸ்பின் மேரி(எ) பேபி**
மகன்: V.ஜார்ஜ் பெர்னாடஸ் அனித்தா
மகள்கள்:
V.சூசன் ஸ்டெல்லா சோல்கர்
V.சூசன் மெர்சலின் ஜேம்ஸ்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

புதுவை.

## விண்ணக வாழ்வின் 12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**15-03-2017**

தோற்றம் :11-07-1917



மறைவு:15-03-2005

திரு. **அதிசயநாத தாவீது**

"ஆண்டவருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தங்கள் கடமை முடித்து இளைப்பாறுகிறார்கள்"

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! இப்பூவுலகினின்று உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் அருமை அப்பாவின் ஆன்மாவிற்கு நித்திய இளைப் பாற்றியையும் முடிவில்லா விண்ணகப் பேரின்பத்தையும் அளித்தருளும்.

பிரிவால் துயருறும்

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்.**

புதுவை.

---

## விண்ணக வாழ்வின் 8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" - யோவான்.11:25

### செபம்

இறைவா! அன்பிற்கும் இரக்கத்திற்கும் உறைவிடமான ஆண்டவரே, ஆத்துமங்களை இரட்சிப்பவரே, உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட

திருமதி. **மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்**

அவர்களின் ஆத்துமத்திற்கு இரக்கம் புரிந்து முடிவில்லா பிரகாசத்தை தந்தருள உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

திருமதி. **மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்**

**மலர்ந்தது : 01-10-1931**
**உதிர்ந்தது: 15-03-2009**

*15-03-2017 புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு கோட்டுச்சேரி சகாய அன்னை ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.*

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**BASTILLE. VENKATESAN (JEAN)**

பிறப்பு : **16-07-1947**
மறைவு : **22-03-2016**

**"என் வாழ்வில் என்னோடு இருந்தவர்களே
என் பிரிவில் எனக்காக செபியுங்கள்"**

**Mr. Bastille. Venkatesan (Jean) தந்தையே**

நீர் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
முத்தாக எம் நினைவில்
மூழ்கியிருக்கும் எம் தந்தையே!
வாழ்நாள் முழுதும் எமைப் பேணி வளர்த்த
மாறா உம்அன்பால் - இம்
மண்ணில் எமை மலர வைத்தீர் - மன
மகிழ்வுடன் கஷ்டங்கள் ஏற்றீர்.
மண்ணில் மாற்றம் காண - இம்
மண்ணிலிருந்து வான் வீட்டிற்குச் சென்றீரோ!
எம் அன்பு தந்தையே! என்றும்
எம் நினைவில் நீர் நீங்காது வாழ்கிறீர்.

உன் ஆசைகளை அகலாக்கி
ஆனந்தத்தை திரியாக்கி
எம்மை ஒளிரச் செய்த எங்கள் ஒளி விளக்கே!
இனி அந்த ஒளியை எங்கு காண்போம்!?

8-04-2017 சனிகிழமை காலை 10.30 மணியளவில் MALESHERBES என்னும் ஊரில் உள்ள ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.

இப்படிக்கு
**பஸ்தி குடும்பத்தினர்.**
பிரான்ஸ்.

---

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவேந்தல்



திருமதி. **ஜோஸ்பின் பிலோமேன்ராஜ்**

**தோற்றம் : 4-4-1948**
**மறைவு : 15-3-2016**

**ஜெபம்**

அன்பின் இறைவா! இவ்வுலகில், அன்பின் உருவாய், பொறுமையின் சிகரமாய் நட்பின் இலக்கணமாய்த் திகழ்ந்து விண்ணுலகிற்கு உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட உமது விசுவாசியாகிய,

திருமதி. **ஜோஸ்பின் பிலோமேன்ராஜ்**

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் அளித்திருளும்படி இறைஞ்சி மன்றாடுகிறோம். ஆமென். - கர்.மங்.திரி.

15-3-2017 காலை 6.00 மணிக்கு புதுவை முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும், மாலை 6.00 மணிக்கு புதுவை, தூய இதய ஆண்டவர் பசிலிக்காவிலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் வாடும்
கணவர்: சிந்தனை செல்வர் **இர. பிலோமேன்ராஜ்,**
பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி (முன்னாள் ஆசிரியர்)
அரசுவேலைவாய்ப்புத்துறைஉதவியாளர்(ஓய்வு);எழுத்தாளர் சர்வவியாபி இதழ்
கத்தோலிக்க நற்செய்தி அறிவிப்பாளர்
மகள்கள்: கிறிஸ்டா பெல்லா இருதயமரி - ஸ்டீபன்ராஜ்
அனிதா எழிலரசி - பூபாலன்; மகன்: ஜோசப் - லில்லி ப்ளோரா
பேரப்பிள்ளைகள்: ஆண்டனி டிரிஸ்டன், மோனிகா மார்சீனா,
அருள்பிரகாசம், சாரா
முத்தியால்பேட்டை, புதுவை-3.

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய அமைதி அடைவார்களாக.**

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







**மண்ணில் அரும்பியது 27-11-1954**

**விண்ணில் மலர்ந்தது 13-03-2016**

# Irene Savary

**"நீங்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர் அவரது அன்பிற்குரியவர்"**

அன்பின் நல் உருவமாய்,
அரவணைப்பில் நல் அன்னையாய்,
அமைதியின் உயர் சிகரமாய்,
எம்மை வளர்த்திட்ட அன்பு தாயே!
இறைவன் உம்மை எடுத்துக் கொண்டாலும்
நீர் நம்பி வாழ்ந்த கடவுள் உம்மை
அவரது இல்லத்தில் மகிமையில் அமைதியில் ஏற்றுக்கொள்வாராக!

## ஜெபம்

ஓ! இனிய இயேசுவே! நிலையான பேரின்பத்தின் தூய ஒளியே, கருணையின் உருவே, உம்மால் அழைக்கப்பட்டவரும் என்றும் மறக்க முடியாதபடி எங்கள் மனதில் நிலைத்துவிட்டவருமான எங்கள் அன்பு அன்னையின் ஆன்மாவை இரக்கம் புரிந்து இறையாட்சியில் இணைத்திட வேண்டுமென்று இறைஞ்சுகிறோம். - ஆமென்.

**பிரிவால் துயருறும்**

மகன்: Gilles Savary - மருமகள்: Stephanie
பேரப்பிள்ளைகள்: Charles Celeste
சகோதரி: Francoise Marianadin குடும்பத்தினர்.
சகோதரன்: Raymond Muttappa
மற்றும் குடும்பத்தினர்.

*திருப்பலி: 13-03-2017 மாலை 5.30 மணிக்கு ஜென்மராக்கினி மாதா பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.*

**நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே!**

## பங்கு அருள்பணியாளர்களுக்கு திருத்தந்தையின் தவக்கால தியானம்

நம்பிக்கையை மிகுதியாக்கும் என்ற வேண்டுதல், மனமாற்றத்தின் துவக்கமாக, நம்மிடமிருந்து எழவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் மறைமாவட்டத்தில் பணியாற்றும் பங்கு அருள்பணியாளர்களிடம் கூறினார். மார்ச் 2, இவ்வியாழன் காலை, புனித ஜான் இலாத்தரன் பசிலிக்கா பேராலயத்தில், உரோம் மறைமாவட்ட பங்கு அருள்பணியாளர்களைச் சந்தித்த திருத்தந்தை, அவர்களுக்கு வழங்கிய தவக்காலத் தியான உரையில் இவ்வாறு கூறினார். உடன் பிறந்தோர் குற்றம் புரிந்தபின் அவர்கள் மன்னிப்பு வேண்டி வந்தால், அவர்களை ஏழுமுறை, எழுபது முறை மன்னிக்க வேண்டும் என்று இயேசு கூறிய சொற்களைத் தொடர்ந்து, அவருடைய சீடர்கள், "எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்" (லூக்.17:5) என்று வேண்டிக்கொண்டதை தன் தியான உரையின் துவக்கத்தில் குறிப்பிட்டத் திருத்தந்தை, நினைவாற்றல், நம்பிக்கை, தேர்ந்து தெளிதல் என்ற மூன்று கருத்துக்களின் அடிப்படையில் தன் உரையை வழங்கினார்.

முதல் பக்கத் தொடர்ச்சி...

நமது நம்பிக்கை வளர்வதற்கு, நினைவாற்றல் மிக உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டத் திருத்தந்தை, நம்பிக்கை கொண்டவர்கள், இறைவன் வழங்கக்கூடிய ஆச்சரியமான வரங்களையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் பெற்றிருப்பர் என்று எடுத்துரைத்தார். நம்பிக்கையுடன் நடந்து செல்லும் பாதையில் ஒவ்வொரு தருணத்திலும் ஏற்படும் திருப்பங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, தேர்ந்து தெளியும் உள்ளத்தை அருள்பணியாளர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று, தன் தியான உரையில் வலியுறுத்திக் கூறினார், நினைவாற்றல் குறித்து விளக்கமாகப் பேசியத் திருத்தந்தை, 'இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்று, சொன்ன இயேசுவின் பலியை, ஒவ்வொரு நாளும் கொண்டாடும் பாக்கியம் பெற்றோர், அருள்பணியாளர்கள் என்பதைச் சுட்டிக்காட்டியபின், "திருப்பலி என் வாழ்வு, மற்றும் என் வாழ்வு தொடர்ந்து நிகழும் ஒரு திருப்பலி" என்று புனித அல்பெர்த்தோ ஹூர்த்தாதோ (Alberto Hurtado) கூறியதை நினைவுகூர்ந்தார்.

✷ **திருத்தந்தையின் மார்ச் ஏப்ரல் திருவழிபாடுகள்:** திருத்தந்தையின் மார்ச் ஏப்ரல் மாதங்களில் தலைமையேற்று நடத்தும் திருவழிபாடுகள் குறித்து, பேரருள்திரு குய்தோ மரினி (Guido Marini), திருத்தந்தையின் திருவழிபாடுகளுக்குப் பொறுப்பாளர், அவர்கள் விவரங்கள் வெளியிட்டார். மார்ச் 17, வெள்ளிக்கிழமை: மாலை 5 மணி: தூயபேதுரு பசிலிக்காவில் பாவமன்னிப்பு வழிபாடு. / மார்ச் 25, சனிக்கிழமை: மிலானுக்குத் திருத்தூதுப் பயணம். / ஏப்ரல் 2, ஞாயிறு: கார்பி மறைமாவட்டத்துக்கு மேய்ப்புப்பணி பயணம்./ ஏப்ரல் 9, குருத்தோலை ஞாயிறு: வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் திருப்பலி. / ஏப்ரல் 13, புனித வியாழன்: காலை 9.30 மணி - வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் புனித எண்ணெய் அர்ச்சிக்கும் திருப்பலி./ ஏப்ரல் 14, புனித வெள்ளி: மாலை 5.00 மணிக்கு திருப்பாடுகளின் திருவழிபாடு; / இரவு 9.15 மணி - கொலோசேயம் திடலில் சிலுவைப் பாதை. / ஏப்ரல் 15, புனித சனி இரவு 8.30 மணி, தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் ஆண்டவரின் பாஸ்கா திருவிழிப்பு திருவழிபாடு. / ஏப்ரல் 16 ஞாயிறு காலை 10 மணி - வத்திக்கான், பேதுரு வளாகத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா திருப்பலி. / நண்பகல் 12.00 மணி - உரோம் நகருக்கும், உலகுக்குமென "ஊர்பி எத் உர்பி (Urbi et Orbi) செய்தி+ ஆசீர்.

✷ **ஐ.நா: 10 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பசியால் உயிரிழக்கும் அபாயம்:** உலகில் 10 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பசியால் உயிரிழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதாக ஐ.நா. நிறுவனம் தன் கவலையை வெளியிட்டுள்ளது. பெரும் வறட்சியால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நைஜீரியா, சொமாலியா, தென் சூடான் மற்றும் ஏமன் நாடுகளில், மக்கள் பசியால் உயிரிழக்கும் ஆபத்து அதிகமாக இருப்பதாக உரைக்கும் ஐ.நா. நிறுவனம், இதுவரை, இந்நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மனிதாபிமான உதவிகளும், பெருமளவில் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கிறது. பஞ்சத்தால் மக்கள் உயிரிழப்பதிலிருந்து காப்பாற்றப்பட்டு வருகின்ற போதிலும், அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த, அதாவது வேளாண்மைக்கும், கால்நடை பராமரிப்புக்கும் போதிய உதவிகளை வழங்கவேண்டும் என, அனைத்துலக நாடுகளிடம் விண்ணப்பித்துள்ளது, ஐ.நா.நிறுவனம். நைஜீரியா வில் விவசாயப் பயிர்களுக்கென தேவைப்படும் 2 கோடி டாலர் உதவித் தொகைக்கு, ஐ.நாவின் FAO எனும், உணவு மற்றும் வேளாண் நிறுவனம் விண்ணப்பம் ஒன்றை வெளியிட்ட போதிலும், மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவாகவே தற்போது கிட்டியுள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

✷ **இந்தோனேசியா: ஒவ்வோர் ஆண்டும் 3,40,000 சிறார் திருமணங்கள்:** இந்தோனேசியாவில் சிறார் திருமணங்களை ஒழிப்பது குறித்து, அந்நாட்டு அரசு மிகவும் அக்கறை காட்ட வேண்டுமென, சிறார்க்கெதிரான வன்முறை ஒழிப்பு குறித்த ஐ.நா.வின் சிறப்புத் தூதர் Marta Santos Pais அவர்கள், இந்தோனேசிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இந்தோனேசிய அரசுத் தலைவர் Joko Widodo அவர்களை அண்மையில் சந்தித்த Pais. அவர்கள், இந்தோனேசியாவில் 25 விழுக்காட்டுச் சிறுமிகள், 18 வயதை எட்டும் முன்னரே திருமணம் செய்து வைக்கப் படுகின்றனர் என்றும் இச்சிறுமிகள் கர்ப்பம் தரிக்கும் போது, அவர்களின் உடல்நலத்திற்கு ஆபத்து ஏற்பட்டு, அவர்கள் மரணத்தையும் எதிர்நோக்க நேரிடும் என்றும் எச்சரித்தார், ஐ.நா. அதிகாரி Pais. இந்தோனேசிய புள்ளிவிபர நிறுவனத்தின்படி, அந்நாட்டில், ஒவ்வோர் ஆண்டும், 15 மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட ஏறக்குறைய 3 இலட்சத்து 40 ஆயிரம் சிறுமிகள் திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர் எனத் தெரிகிறது.

✷ டுவிட்டர் செய்தியாக "உண்ணா நோன்பு என்பது, உணவைத் தவிர்ப்பது மட்டுமல்ல, பசியாய் இருப்போருடன் உணவைப் பகிர்ந்துகொள்வதும் ஆகும்" என்ற சொற்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டார்.

### விவிலியக்குழு அறிக்கை.

அன்புடையீர்! இந்த மார்ச் மாதம், 12 ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை, இயேசுவின் பாடுகளைப் பற்றிய கருத்தரங்கு நம் மறை மாவட்டத்தில் உள்ள அனைவர்க்கும் நடக்கயிருக்கிறது. விவரம் பின்வருமாறு.

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப்பணி மையம்.**

பொருள்: **இயேசுவின் பாடுகளில் வரும் இரண்டு முக்கிய கருத்தோட்டங்கள்.**

***இயேசு - ஆண்டவரின் ஊழியன்.***

முனைவர் அருட்பணி ***அ. மரியசெல்வம்***

***இயேசு - பாஸ்காச் செம்மறி.***

முனைவர் அருட்பணி ***அ. பெஞ்சமின்***

பங்குபெறுபவர்: இருபால் துறவியர், குருக்கள், இறைமக்கள் எல்லாரும்.

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை. பலிப்பூசையோடு முடியும்.

குறிப்புகள், தேனீர், நண்பகல் உணவு அனைத்தையும் விவிலியக் குழு பார்த்துக் கொள்ளும், அன்புடன் வாரீர்! வந்து பயன் அடைவீர்!!

இவண், உங்கள் பிரிய, **அ.பெஞ்சமின்**, (செயலர்).

*Printed and Published* on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.